இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 15-06-2023

# அமித்ஷாக்கள் அறிக! 3

தஞ்சாவூர் - திருவாரூர், மதுரை - இராமேஸ்வரம் உள்பட தமிழகத்திலுள்ள மீட்டர்கேஜ் ரயில்பாதைகள் அனைத்தும் அகல ரயில் பாதைகளாக மாற்றிட அனுமதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்கள் பயன்பெறும் வகையில், சென்னை - புதுடெல்லி 'ஏழைகளின் ரதம்' முழு ஏ.சி. வசதியுடன், வாரம் ஒருமுறை செல்லும் அதிவேக விரைவு ரயில், சென்னை - கோவை விரைவு ரயில் வாரம் ஒருமுறை செல்வது, மதுரை - திருப்பதி விரைவு ரயில் வாரம் ஒருமுறை செல்வது, சென்னை - மங்களூர் விரைவு ரயில் வாரம் மூன்று முறை செல்வது, சென்னை - திருவனந்தபுரம் அதிவேக விரைவு ரயில் தினமும் செல்வது, சென்னை - திருவனந்தபுரம் விரைவு ரயில் வாரம் ஒருமுறை செல்வது, சென்னை எழும்பூர் - நாகர்கோயில் விரைவு ரயில் வாரம் ஒருமுறை செல்வது, புதுச்சேரி - புவனேஸ்வர் விரைவு ரயில் வாரம் ஒருமுறை செல்வது, சென்னை - பிளாஸ்பூர் விரைவு ரயில் வாரம் ஒருமுறை செல்வது, பெங்களூரு - டார்பங்கா விரைவு ரயில் வாரம் ஒருமுறை செல்வது, சென்னை - இராமேசுவரம் அகல ரயில் பாதையில் தினமும் செல்லும் புதிய ரயில் எனப் பல்வேறு புதிய ரயில்கள் இயக்கப்பட்டுள்ளன.

* பயண தூரம் நீட்டிக்கப்பட்ட ரயில்கள் சென்னை - வாரணாசி விரைவு ரயில் வாரம் நான்கு நாள்கள் செல்வது, இரண்டு நாள்கள் சாப்ரா வரையிலும், ஜெய்ப்பூர் - சென்னை விரைவு ரயில் கோவை வரையிலும், திருச்சி - கும்பகோணம் பயணிகள் ரயில் மயிலாடுதுறை வரையிலும், மைசூர் - கும்பகோணம் விரைவு ரயில் மயிலாடுதுறை வரையிலும், திருச்சி - தஞ்சாவூர் பயணிகள் ரயில் மயிலாடுதுறை வரையிலும், மதுரை மானாமதுரை பயணிகள் ரயில் ராமேஸ்வரம் வரையிலும், இவ்வாறாக, இதுவரை இல்லா அளவுக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசினால் ரயில் போக்குவரத்து வசதிகள் தமிழகத்தில் பெருகியுள்ளன.

* 1,828 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 90 ரயில்வே மேம்பாலங்களைக் கட்டுவதற்கு ஒன்றிய அரசு அனுமதித்து, இதுவரை 19 கோடி ரூபாய் செலவில் மதுரை எல்லீஸ் நகர் மேம்பாலம், 9 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் தருமபுரி மாவட்டம் மொரப்பூர் அருகே மேம்பாலம், 16 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் ஈரோடு அருகே ஊத்துக்குளி மற்றும் திம்மநாயக்கன் பாளையம் அருகே இரண்டு மேம்பாலங்கள், 18 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடி மற்றும் ஓமலூர் அருகே இரண்டு மேம்பாலங்கள், 29 கோடி ரூபாய் செலவில் வேலூர் மாவட்டம் குடியாத்தம், திருப்பத்தூர் மற்றும் அரக்கோணம் அருகே மூன்று மேம்பாலங்கள், 40 கோடியே 65 லட்சம் ரூபாய் செலவில் சென்னை கத்திவாக்கம் மற்றும் மடுவங்கரை அருகே இரண்டு மேம்பாலங்கள்; 32 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் கோவை மாவட்டம் ஒண்டிப்புதூர் மற்றும் வாளாங்குளம் அருகே இரண்டு மேம்பாலங்கள், 7 கோடி ரூபாய் செலவில் மதுரை மாவட்டம் கோவில்பட்டி அருகே மேம்பாலம், 11 கோடி ரூபாய் செலவில் திருச்சி பாலக்கரை மேம்பாலம், 12 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் கரூர் நகரில் மேம்பாலம்; 9 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் மதுரை கூடல்நகர் அருகே மேம்பாலம், 17 கோடி ரூபாய் செலவில் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் மேம்பாலம் என 223 கோடி ரூபாய் செலவில் 18 ரயில்வே மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய இரயில்வே மேம்பாலங்களின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

*** ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன், ரூ.14,400 கோடி மதிப்பீட்டில் சென்னை மாநகரில் மெட்ரோ ரயில் திட்டம்.**

*** தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகிய ரூ.1,330 கோடி மதிப்பீட்டிலான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

*** 57 கோடி ரூபாய் செலவில் 6 ஹெக்டேர் நிலப்பரப்பில், தூத்துக்குடி துறைமுகத்தில் 9வது தளம் அமைக்கப்பட்டு, 14.07.2008 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.**

*** திருவாரூரில் மத்தியப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது.**

*** ரூ.245 கோடி முதலீட்டில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் இந்திய கடல் சார் பல்கலைக்கழகம் சென்னையில் 31.12.2008 தொடங்கிவைக்கப் பட்டுள்ளது.**

*** ஆசியாவிலேயே முதலாவதாகச் சென்னைக்கு அருகில் பலவகை மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய நிறுவனம்.**

*** சென்னையில் மத்திய அதிரடிப்படை மையம் (என்.எஸ்.ஜி.).**

*** திருப்பெரும்புதூரில் 4,821 ஏக்கர் நிலப்பரப்பில் இந்திய வானூர்தி ஆணையத்தின்மூலம் புதிதாக மற்றுமொரு பன்னாட்டு விமான நிலையம் 'கிரீன்பீல்டு விமான நிலையம்' என்னும் பெயரில் அமைத்திட ஒப்புதல் தரப்பட்டது.**

*** அதி நவீன விமான நிலையமாக திருச்சி விமான நிலையம் மேம்படுத்தப்பட்டுள்ளது. 128 கோடியே 76 லட்சம் ரூபாய் செலவில் மதுரை விமான நிலையத்தினை விரிவாக்கி, நவீனமயமாக்கிடும் நோக்கில் ஒருங்கிணைந்த முனையக் கட்டடம் கட்டுவதற்கும், கூடுதல் விமான நிறுத்துத்தளம் அமைப்பதற்கும் 26.04.2008 அன்று அடிக்கல் நாட்டப் பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.**

*** ஒன்றிய அரசின் உதவியுடன் கோவை விமான நிலைய விரிவாக்கம், வேலூர் விமான நிலைய மேம்பாடு ஆகியவற்றுடன், தூத்துக்குடியில் புதிதாக விமான நிலையம் அமைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.**

- இவை அனைத்தும் 2004-2009 ஆட்சிக் காலத்தில் செய்து தரப்பட்ட பணிகள் ஆகும். இதில் இருப்பவை பெரும்பாலும் சிறப்புத் திட்டங்கள்தான். சாலைகள், ரயில் பாதைகளை வழக்கமான நிதி ஒதுக்கீடுகள் என்று சொன்னால் மற்றவை அனைத்தும் தமிழ்நாட்டுக்காக சிறப்பாகச் செய்து தரப்பட்ட சிறப்புத் திட்டங்கள் ஆகும். இது போலத்தான் என்னென்ன செய்துள்ளீர்கள் என்று கேட்கிறோம்.

ஆனால், ஏராளமான நிதிகளை ஒதுக்கீடு செய்துள்ளதாக புள்ளிவிபரம் சொல்லி இருக்கிறார் உள்துறை அமைச்சர் அவர்கள். அதுவாவது சரியானதா? முறையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் அதுவும் இல்லை. அதனையும் காண்போம்.

- தொடரும்

## 'பிபோர்ஜோய்' புயல் : குஜராத்தில் இன்று கரையைக் கடக்கிறது!

*புதுடெல்லி, ஜூன் 15-*

*அரபிக் கடலின் கிழக்கு மத்திய பகுதியில் இந்த மாத தொடக்கத்தில் குறைந்த காற்றழுத்தம் உருவானது. அதன் பிறகு அது கடந்த 6ந்தேதி புயலாக மாறியது. அந்த புயலுக்கு 'பிபோர்ஜோய்' என்று பெயரிடப்பட்டுள்ளது. அந்த புயல் வடக்கு திசை நோக்கி கடந்த சில தினங்களாக நகர்ந்து வந்தது.*

*இந்த நிலையில் அது தீவிர புயலாகவும், அதி தீவிர புயலாகவும் அடுத்தடுத்து மாறியது. வடகிழக்கு அரபிக் கடலில் நிலை கொண்டிருக்கும் 'பிபோர்ஜோய்' புயல் மணிக்கு 8 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வருகிறது.*

*இந்த அதிதீவிர புயல் குஜராத்தின் போர்பந்தரில் இருந்து 250 கி.மீ. தொலைவில் உள்ளது. இது இன்று (வியாழக்கிழமை) குஜராத்தின் ஜக்காவ் துறைமுகப் பகுதியில் கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. அதிதீவிர புயல் கரையை கடக்கும்போது பலத்த மழையும், பலத்த காற்றும் வீசும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.*

*குறிப்பாக மணிக்கு 125 முதல் 150 கி.மீ. வேகத்தில் சூறாவளி காற்று வீசும் என்று கூறப்பட்டு இருந்தது. அதன் படி மராட்டியம், குஜராத் மாநிலங்களில் நேற்று முன்தினம் முதல் மிக பலத்த மழையும், மிக பலத்த சூறாவளி காற்றும் வீசத் தொடங்கியுள்ளது. மும்பையில் கடல் கொந்தளிப்பு காணப்படுகிறது. அதில் 4 பேர் சிக்கினார்கள்.*

*ஒருவர் மீட்கப்பட்ட நிலையில் 3 பேரின் கதி என்னவென்று தெரியவில்லை. இதற்கிடையே புயல் காரணமாக இன்று குஜராத்தின் கட்ச், துவாரகா, போர்பந்தர், ஜாம்நகர், ராஜ்கோட், ஜூனாகர், மோர்பி உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது.*

*புயல் காரணமாக குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் 144 தடை உத்தரவு அமல் செய்யப்பட்டுள்ளது. அந்த மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு நேற்று முதல் 3 நாட்கள் விடுமுறை விடப்பட்டுள்ளது. புயல் அபாயம் உள்ள இதர மாவட்டங்களிலும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.*

### பா.ஜ.க.வின் ஜனநாயக விரோத - பழிவாங்கும் எதேச்சதிகாரச் செயல்

# கோவையில் ஜூன் 16ல் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

அமலாக்கத்துறையை ஏவி விட்டு அமைச்சர் செந்தில் பாலாஜியை அராஜக முறையில் கைது செய்துள்ள பா.ஜ.க.வின் ஜனநாயக விரோத - மக்கள் விரோத பழிவாங்கும் எதேச்சதிகார நடவடிக்கைகளைக் கண்டித்து **கோவை மாநகர், சிவானந்தா காலனியில் நாளை (16ந் தேதி) மாலை 5.00 மணிக்கு மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்** நடைபெறும் என மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தக் கண்டனப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுவோர் விபரம் வருமாறு:-

**டி.ஆர்.பாலு, எம்.பி.**
கழகப் பொருளாளர்
தி.மு.க.

**ஆசிரியர் கி.வீரமணி**
தலைவர்
திராவிடர் கழகம்

**கே.எஸ்.அழகிரி**
தலைவர்
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

**வைகோ**
பொதுச்செயலாளர்
ம.தி.மு.க.

**கே.பாலகிருஷ்ணன்**
செயலாளர்
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ் மாநிலக் குழு

**ஆர்.முத்தரசன்**
செயலாளர்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ் மாநிலக் குழு

**கே.எம்.காதர்மொகிதீன்**
தலைவர்
இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

**தொல்.திருமாவளவன்**
தலைவர்
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

**எம்.எச்.ஜவாஹிருல்லா**
தலைவர்
மனித நேய மக்கள் கட்சி

**ஈ.ஆர்.ஈஸ்வரன்**
பொதுச் செயலாளர்
கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி

**தி.வேல்முருகன்**
தலைவர்
தமிழக வாழ்வுரிமைக் கட்சி

கூட்ட ஏற்பாடு : கோவை மாநகர் - கோவை வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க.

### பா.ஜ.க. அரசின் அமலாக்கத்துறை அத்துமீறல்! கைது செய்யப்பட்ட

# அமைச்சர் செந்தில் பாலாஜி திடீர் நெஞ்சுவலியால் மருத்துவமனையில் அனுமதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஓமந்தூரார் அரசு மருத்துவமனைக்குச் சென்று நலம் விசாரித்தார்!

**சென்னை, ஜூன் 15-**

**மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அமைச்சர் செந்தில் பாலாஜியை கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.**

மின்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி அமலாக்கத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிராக 17 மணி நேரத்திற்கும் மேலாக அவரது வீடு உள்ளிட்ட இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தினர். அதன் பின் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அப்போது அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு திடீர் என உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அமலாக்கத்துறையினரால் செந்தில் பாலாஜி சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**தீவிர சிகிச்சைப் பிரிவில் அமைச்சர் செந்தில் பாலாஜி!**

இந்நிலையில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.6.2023) காலை ஓமந்தூரார் அரசு மருத்துவமனைக்கு நேரடியாகச் சென்று அமைச்சர் செந்தில் பாலாஜியைச் சந்தித்து நலம் விசாரித்தார்.



அப்போது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

**அமைச்சர்கள் நலம் விசாரித்தனர்!**

முன்னதாக அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, க.பொன்முடி, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின், எஸ்.ரகுபதி, கீதாஜீவன், அனிதா இராதாகிருஷ்ணன், ஆர்.காந்தி, எஸ்.எஸ்.சிவசங்கர், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், கழக முன்னணியினர் உள்ளிட்டோர் அமைச்சர் செந்தில் பாலாஜியை சந்தித்து நலம் விசாரித்தனர்.

**மருத்துவ அறிக்கை**

இந்நிலையில் ஓமந்தூரார் மருத்துவமனைவெளியிட்டுள்ள அறிக்கையில், "மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, வயது 47, அவர்களுக்கு இருதய இரத்த நாள பரிசோதனை 14.6.2023 அன்று காலை 10.40 மணி அளவில் செய்யப்பட்டது.

அப்பரிசோதனையில் மூன்று முக்கியமான இரத்த குழாய்களில் அடைப்பு உள்ளது கண்டறியப்பட்டது.

அதற்கு விரைவில் பை பாஸ் அறுவை சிகிச்சை செய்ய பரிந்துரைக்கப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.